Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.106/2018

**Depositions of PW- 7**

| Name | திரு.கந்தராஜு | Occupation | பணி ஓய்வு |
|---|---|---|---|
| Father's name | கோவிந்தன் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of July 2026.

10.07.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 2013 முதல் 2016 வரை அச்சம்தவிழ்த்தான் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது சேதுராமன் என்பவர் பட்டா மாற்றுவதற்காக ஒரு பத்திரத்தை எடுத்துக்கொண்டு வந்து என்னிடம் கேட்டார். அந்த பட்டாவானது வைத்தி மனைவி சுலோச்சனா என்பவரது பெயரில் இருந்தது. அதனால் சேதுராமன் என்பவரது பெயருக்கு பட்டா மாற்ற முடியாது என்று கூறினேன். அதற்கு அவர் தான் ஏற்கனவே மேற்படி வைத்தி என்பவரிடமிருந்து மேற்படி ஆவணத்திலுள்ள சொத்தை வாங்கிவிட்டதாகவும் அதன்பின்னர் எப்படி அவர் தனது மனைவிக்கு மேற்படி சொத்தை எழுதிக்கொடுத்தார் என்றும் கேட்டார். நான் அவரை வில்லங்கசான்றிதழ் எடுத்து பார்க்குமாறு கூறினேன். சேதுராமன் வில்லங்கச்சான்றிதழுடன் வந்து என்னை அணுகினார். நான் அதனை பார்த்துவிட்டு ஏற்கனவே மேற்படி சொத்தை வைத்தி என்பவர் சேதுராமனுக்கு விற்ற பின்னர் மீண்டும் அதனை அவரது மனைவி சுலோச்சனா பேருக்கு விற்றதாக தெரிவித்து ஒரு அறிக்கை தயார் செய்த தாலுகா அலுவலகத்திற்கு நான் அனுப்பினேன். அந்த அறிக்கையில் மேற்படி பட்டாவை ரத்து செய்யுமாறு பரிந்துரைத்து தாசில்தாருக்கு

அதனை அனுப்பிவைத்தேன். என்னிடம் காட்டப்படும் அசாஆ.4 மற்றும் அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களை நான் தான் வழங்கினேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

மேற்படி வைத்தி என்பவர் சேதுராமனுக்கு எவ்வளவு இடம் எழுதிக்கொடுத்தார் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் 2 செண்டு எழுதிக்கொடுத்ததாக கூறினார். மேற்படி 2 செண்டை எந்த தேதியில் எழுதிக்கொடுத்தார் என்றால் அதுபற்றி தற்போது எனக்கு நியாபகமில்லை. மேற்படி வைத்திக்கு எவ்வளவு இடம் இருந்தது என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் 241 சதுரமீட்டர் இடம் இருந்தது. பொதுவாக பட்டா வேறு நபர் பெயரில் இருந்தாலோ அல்லது வேறு யாராவது அதனை மாற்றம் செய்திருந்தாலோ உரிமையியல் வழக்கு தான் தாக்கல்செய்ய முடியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.